ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வானோர் அளவும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வானோர் அளவும் ॥

திருக்கண்ணபுரம் - 8

‡வானோர் அளவும் முது முந்நீர்⋆
    வளர்ந்த காலம்⋆ வலியுருவின்
மீனாய் வந்து வியந்துய்யக்-
    கொண்ட⋆ தண் தாமரைக் கண்ணன்⋆
ஆனா உருவிலான் ஆயன்⋆
    அவனை அம்மா விளை வயலுள்⋆
கானார் புறவிற் கண்ணபுரத்து⋆
    அடியேன் கண்டு கொண்டேனே (1)

மலங்கு விலங்கு நெடு வெள்ளம்
    மறுக⋆ அங்கோர் வரை நட்டு⋆
இலங்கு சோதியார் அமுதம்⋆
    எய்தும் அளவோர் ஆமையாய்⋆
விலங்கல் திரியத் தடங்கடலுள்⋆
    சுமந்து கிடந்த வித்தகனை⋆
கலங்கல் முந்நீர்க் கண்ணபுரத்து⋆
    அடியேன் கண்டு கொண்டேனே (2)

பாரார் அளவும் முது முந்நீர்⋆
    பரந்த காலம்⋆ வளை மருப்பில்
ஏரார் உருவத்தேனமாய்⋆
    எடுத்த ஆற்றல் அம்மானை⋆
கூராராரல் இரை கருதிக்⋆
    குருகு பாயக் கயல் இரியும்⋆
காரார் புறவின் கண்ணபுரத்து⋆
    அடியேன் கண்டு கொண்டேனே (3)

www.prapatti.com

உளைந்த அரியும் மானிடமும்⋆
    உடனாய்த் தோன்ற ஒன்றுவித்து⋆
விளைந்த சீற்றம் விண் வெதும்ப⋆
    வேற்றோன் அகலம் வெஞ்சமத்து⋆
பிளந்து வளைந்த உகிரானைப்⋆
    பெருந் தண் செந்நெல் குலை தடிந்து⋆
களஞ்செய் புறவிற் கண்ணபுரத்து⋆
    அடியேன் கண்டு கொண்டேனே (4)

தொழுநீர் வடிவின் குறள் உருவாய்⋆
    வந்து தோன்றி மாவலி பால்⋆
முழுநீர் வையம் முன் கொண்ட⋆
    மூவா உருவின் அம்மானை⋆
உழுநீர் வயலுள் பொன் கிளைப்ப⋆
    ஒரு பால் முல்லை முகையோடும்⋆
கழுநீர் மலரும் கண்ணபுரத்து⋆
    அடியேன் கண்டு கொண்டேனே (5)

வடிவாய் மழுவே படையாக⋆
    வந்து தோன்றி மூவெழுகால்⋆
படியார் அரசு களைகட்ட⋆
    பாழியானை அம்மானை⋆
குடியா வண்டு கொண்டுண்ணக்⋆
    கோல நீலம் மட்டுகுக்கும்⋆
கடியார் புறவிற் கண்ணபுரத்து⋆
    அடியேன் கண்டு கொண்டேனே (6)

வையம் எல்லாம் உடன் வணங்க⋆
    வணங்கா மன்னனாய்த் தோன்றி⋆
வெய்ய சீற்றக் கடியிலங்கை⋆
    குடிகொண்டோட வெஞ்சமத்து⋆
செய்த வெம்போர் நம்பரனைச்⋆
    செழுந் தண் கானல் மண நாறும்⋆

www.prapatti.com

கைதை வேலிக் கண்ணபுரத்து⋆
அடியேன் கண்டு கொண்டேனே (7)

ஒற்றைக் குழையும் நாஞ்சிலும்⋆
ஒரு பால் தோன்றத் தான் தோன்றி⋆
வெற்றித் தொழிலார் வேல் வேந்தர்⋆
விண் பால் செல்ல வெஞ்சமத்து⋆
செற்ற கொற்றத் தொழிலானைச்⋆
செந்தீ மூன்றும் இல்லிருப்ப⋆
கற்ற மறையோர் கண்ணபுரத்து⋆
அடியேன் கண்டு கொண்டேனே (8)

துவரிக் கனிவாய் நில மங்கை⋆
துயர் தீர்ந்துய்யப் பாரதத்துள்⋆
இவரித்தரசர் தடுமாற⋆
இருள் நாள் பிறந்த அம்மானை⋆
உவரியோதம் முத்துந்த⋆
ஒரு பால் ஒரு பால் ஒண் செந்நெல்⋆
கவரி வீசும் கண்ணபுரத்து⋆
அடியேன் கண்டு கொண்டேனே (9)

‡மீனோடாமை கேழல் அரி
குறளாய்⋆ முன்னும் இராமனாய்த்
தானாய்⋆ பின்னும் இராமனாய்த்
தாமோதரனாய்க்⋆ கற்கியும்
ஆனான் தன்னை⋆ கண்ணபுரத்
தடியன்⋆ கலியன் ஒலிசெய்த⋆
தேனார் இன் சொல் தமிழ் மாலை⋆
செப்பப் பாவம் நில்லாவே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com